நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதுள்ளேன். அவர்கள் தனது வலப்புறமாக திரும்பி, **السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ** என்றும் இடப்புறமாக திரும்பி , **السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللَّهِ** என்றும் கூறி, ஸலாம் கொடுப்பார்கள்

வாஇல் பின் ஹுஜ்ர் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதுள்ளேன் . அவர்கள் தனது வலப்புறமாக திரும்பி , السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ என்றும் இடப்புறமாக திரும்பி, السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ என்றும் கூறி, ஸலாம் கொடுப்பார்கள்.

[நம்பகமானது (ஹஸன்)] [இதனை இமாம் அபூதாவுத் பதிவு செய்துள்ளார்]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை நிறைவு செய்ய நாடினால் வலப்புறமாகவும், இடப்புறமாகவும் ஸலாம் கொடுப்பார்கள். அதாவது தனது முகத்தை வலப்புறம் திருப்பி السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ என்றும் பின்னர் முகத்தை இடப்புறம் திருப்பி السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ என்றும் கூறுவார்கள்.

http://www.sunnah.global/hadeeth/ta/show/10945